பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 03 2024 **FRIDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கேரளா மற்றும் தமிழகத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பயணம் மேற்கொள்கிறார்.

2. பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு 2 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன

3. பாரத ஸ்டேட் வங்கி அளித்திருந்த தேர்தல் பத்திர விவரங்களை தேர்தல் ஆணையம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.

4. ரஷ்யாவில் புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப்பதிவு இன்று தொடங்குகிறது.

5. **Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிருஷ்ணபிரசாத் - சாய் ப்ரதீக் இணை காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, கேரள மாநிலம், பத்தனம்திட்டா மாவட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் திரு. அனில் ஆண்டனிக்கு ஆதரவாக இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

பின்னர், அங்கு நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

பின்னர் திருவனந்தபுரம் செல்லும் பிரதமர், அங்கிருந்து கன்னியாகுமரி வருகிறார்.

அங்கு இன்று காலை நடைபெறவுள்ள பிஜேபி பொதுக்கூட்டத்தில் பிரதமர் உரையாற்றவுள்ளார்.

பிரதமரின் வருகையை ஒட்டி, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - குமார் 38 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, வரும் 18ஆம் தேதி சேலத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திலும், 19ஆம் தேதி கோவையில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் திரு. நரேந்திர மோடி உரையாற்றவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

பூட்டான் பிரதமர் திரு. **Dasho Tshering Tobgay,** நேற்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து புதுதில்லியில் பேச்சு நடத்தினார்.

கடந்த ஜனவரி மாதம் பூட்டான் பிரதமராக பதவியேற்ற அவர், முதல்முறையாக வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

வரும் 18ஆம் தேதியில் இந்தியாவில் பயணம் மேற்கொள்ளும் அவர், தமது பயணத்தின் ஒரு பகுதியாக மும்பை செல்லவுள்ளார்.

அவருடன் பூட்டான் வெளியுறவு அமைச்சர், தொழில்துறை அமைச்சர் மற்றும் உயரதிகாரிகள் தில்லி வந்துள்ளனர்.

>>>><<<<

நாட்டின் வளர்ச்சியில் டிஜிட்டல் கட்டமைப்பு முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

நேற்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஏழை மக்களுக்கான இலவச உணவு தானியம் வழங்கும் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இது, பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இளையோருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகள் தொடரும் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் கூறினார்.

>>>><<<<

பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு 2 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இது, இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது.

இதையடுத்து சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை 100 ரூபாய் 75 பைசாவாகவும், டீசல் விலை 92 ரூபாய் 34 பைசாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த விலை குறைப்பு மூலம் டீசலில் இயக்கப்படும் 58 லட்சம் கனரக சரக்கு வாகனங்கள் மற்றும் பெட்ரோலில் இயக்கப்படும் 6 கோடி கார்கள், 27 கோடி இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றுக்கான எரிபொருள் செலவு குறையும் என்று குறிப்பிட்டுள்ளது.

>>>><<<<

மேற்குவங்க முதலமைச்சர் செல்வி. மம்தா பானர்ஜி அவரது இல்லத்தில் தவறி கீழே விழுந்ததில், தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, கொல்கத்தாவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அவர், பின்னர் வீடு திரும்பினார்.

அவருடைய உடல்நிலையை மருத்துவர்கள் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், இன்று மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த செல்வி மம்தா பானர்ஜி விரைவில் குணமடைய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ஆகியோர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

>>>><<<<

ஜார்கண்ட் மாநிலத்திலிருந்து, மாநிலங்களவைக்கு பிஜேபியைச் சேர்ந்த டாக்டர் பிரதீப் வர்மா, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ், ராஷ்ட்ரீய ஜனதா தளம் கூட்டணியைச் சேர்ந்த டாக்டர் சர்ஃபராஷ் அஹமது ஆகியோர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஜார்க்கண்ட் சட்டப்பேரவை செயலாளர் திரு. சையத் ஜாவித் ஹைதர் இதனை முறைப்படி அறிவித்தார்.

>>>><<<<

நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் முதல்முறை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு இயக்கத்திற்கு ஆதரவு பெருகியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பான காணொலியையும் வெளியிட்டுள்ளார்.

இளையதலைமுறையினரிடையே வாக்களிப்பதற்கான ஆர்வமும் இதில் வெளிப்படுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, உலகப்புகழ் பெற்ற மாமல்லபுரம் கடற்கரை கோவில் வளாகத்தில் 100 சதவீத வாக்குப்பதிவின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், ஏராளமான முதல்முறை வாக்காளர்கள் பங்கேற்றனர்.

**>>>><<<<**

தமிழகத்தில், புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள ஆயிரத்து 196 செவிலியர்களுக்கு இன்று பணிநியமன ஆணைகள் வழங்கப்படவுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சி, சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், சென்னை சைதாப்பேட்டையில் அமைந்துள்ள அரசு புறநகர் மருத்துவமனையில் பேறுகால பச்சிளம் குழந்தை சிகிச்சைப் பிரிவிற்கு நேற்று அடிக்கல் நாட்டினார்.

அத்துடன், அப்பகுதியில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் அங்காடி கட்டிடங்களையும் திரு. மா. சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

**>>>><<<<**

பாரத ஸ்டேட் வங்கி அளித்திருந்த தேர்தல் பத்திர விவரங்களை தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.

**www.eci.gov.in** என்ற இணையதளம் வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

**>>>><<<<**

தேர்தல் ஆணையர்களாக திரு. **Gyanesh Kumar**-ம், டாக்டர் **Sukhbir Singh Sandhu** -வும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

**>>>><<<<**

காங்கிரஸ் கட்சியிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பர்னீத் கவுர் நேற்று பிஜேபியில் இணைந்தார்.

புதுதில்லியில் பிஜேபி தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. வினோத் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் சேர்ந்தார்.

திரு. பர்னீத் கவுர் பிஜேபியில் இணைந்ததன் மூலம் பஞ்சாப் மாநிலத்தில் தமது கட்சியும், அம்மாநிலமும் வளர்ச்சி பெற உதவும் என்று திரு. வினோத் கூறினார்.

>>>><<<<

பாலஸ்தீன நாட்டின் புதிய பிரதமராக திரு. மொஹமது முஸ்தாபாவை அந்நாட்டு அதிபர் திரு. மொஹமது அப்பாஸ் நியமித்துள்ளார்.

பாலஸ்தீன நாட்டின் பொருளாதார ஆலோசகராக திரு. முஸ்தாபா நீண்ட காலமாக பொறுப்பு வகித்துள்ளார்.

>>>><<<<

கர்நாடக மாநிலத்தில் சாலை விரிவாக்கப் பணிகளுக்காக ஆயிரத்து 385 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய மத்திய சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி ஒப்புதல் அளித்துள்ளார்.

இதன் மூலம், சாலைக் கட்டமைப்பு மேம்படுவதுடன், சமூக பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று அவர் கூறியுள்ளார்.

அத்துடன் 31 மாநில சாலைத் திட்டங்களுக்கு 850 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கும் அவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதற்கிடையே, ராஜஸ்தானில் சாலை விரிவாக்கப் பணிகளுக்காக 972 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கும் அமைச்சர் திரு. நிதின் கட்கரி ஒப்புதல் அளித்துள்ளார்.

>>>><<<<

மணிப்பூரில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் இன்று தொடங்குகின்றன.

அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை இந்த தேர்வுகள் நடைபெறவுள்ளன.

இதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

>>>><<<<

ரஷ்யாவில் புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப்பதிவு இன்று தொடங்கி, மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

முதல்முறையாக ரஷ்யாவில் ஆன்லைன் வாயிலாக வாக்குகளை பதிவு செய்யும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வசதி ரஷ்யாவின் 27 பிராந்தியங்கள் மற்றும் கிரிமியா பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுடன், **Nikolai, Leonid, Vladislav** ஆகியோரும் களத்தில் உள்ளனர்.

>>>><<<<

**Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிருஷ்ணபிரசாத் - சாய் ப்ரதீக் இணை காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-14, 21-9 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Cattoen - Renoir** இணையை வென்றது.

>>>><<<<

ஆல் இங்கிலாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 24–22, 11–21, 21–14 என்ற செட்கணக்கில் டென்மார்க்கின் **Anders Antonsen**–ஐ வென்றார்.

மகளிர் பிரிவில் பி.வி. சிந்து தோல்வியடைந்தார்.

>>>><<<<

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் எலிமினேட்டர் சுற்றில் மும்பை அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

இதில் வெற்றிபெறும் அணி இறுதியாட்டத்தில் தில்லி அணியை எதிர்கொள்ளும்.

>>>>END<<<<